அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2024

# தமிழ்
## ஆண்டு 3

நேரம்: 90 மணித்துளிகள்

நாள்: 01.06.2024

**மொத்தப்புள்ளிகள்: 100**
(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

**பக்கங்கள்**
12

சுட்டெண்: | | | | | | | | | | |

# பகுதி 1 - எழுதுதல்

## 1 பொருத்தமாக இணைக்குக.

| | |
|---|---|
| எ.கா: கசப்புச் சுவை உடையது | பனை |
| 1. தமிழரது வீர விளையாட்டுகளுள் ஒன்று | முயல் |
| 2. இந்தியாவில் உள்ள உலக வியப்பு | சிலம்பம் |
| 3. வேகமாக ஓடுவது | பாகற்காய் |
| 4. உயரமான மரம் | மீன் |
| 5. தண்ணீரில் துள்ளுவான்; தரையில் தள்ளாடுவான். அவன் | தாச்மகால் |

5 X 2 = 10 புள்ளிகள்

## 2 சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதுக.

எ.கா: நாம் தமிழில் பேசுவோம். — தமிழ் + இல்

1. புறநானூறு ____________ வீரத்தைப் பற்றிக் கூறுகிறது. — தமிழர் + உடைய
2. ____________ ஈகம் வணங்குவதற்கு உரியது. — மாவீரர் + அது
3. கல்லணை சோழரது ____________ ச் சான்றாகும். — புகழ் + கு
4. நாம் ____________ பார்க்கின்றோம். — கண்கள் + ஆல்
5. திருக்குறள் சிறந்த ____________ க் கூறுகிறது. — பண்புகள் + ஐ

5 X 2 = 10 புள்ளிகள்

## 3 எடுத்துக்காட்டைப் பார்த்துப் பொருத்தமாக எழுதுக.

எ.கா: நாய் வீட்டு விலங்கு. பூனை வீட்டு விலங்கு.

நாயும் பூனையும் வீட்டு விலங்குகள்.

1. எழிலன் நூலகத்துக்குச் சென்றான். இனியவன் நூலகத்துக்குச் சென்றான்.

2. தம்பி பாட்டுப் பாடினான். தங்கை பாட்டுப் பாடினாள்.

3. திருக்குறள் சிறந்த அறநூல். நாலடியார் சிறந்த அறநூல்.

4. பழம் மரத்தில் இருக்கிறது. காய் மரத்தில் இருக்கிறது.

5. கரும்பு இனிப்புச் சுவை உடையது. தேன் இனிப்புச் சுவை உடையது.

5 X 2 = 10 புள்ளிகள்

## 4 பொருத்தமான சொல்லைத் தெரிந்து எழுதுக.

| | |
|---|---|
| திரை | திறை |
| வீறன் | வீரன் |
| மாலை | மாழை |
| எனது | எணது |
| நீள | நீல |
| விழா | விலா |

எ.கா: குறுநில மன்னர்கள் திறை செலுத்தினர்.

1. சங்கிலியன் சிறந்த ____________ .
2. தமிழினி ____________ அணிந்தாள்.
3. ____________ புத்தகம் எங்கே?
4. குயிலியின் சட்டை ____________ நிறம்.
5. பள்ளியில் ____________ நடைபெற்றது.

5 X 2 = 10 புள்ளிகள்

## 5 பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

| | | |
|---|---|---|
| அழைப்பர் | உள்ளன | மொழி |
| போற்றுகின்றனர் | ~~ஆள்வோம்~~ | இருப்போம் |

எ.கா: எமது மண்ணை நாமே ஆள்வோம்.

1. தாயகத்தில் அழகு நிறைந்த இடங்கள் ____________ .
2. தமிழ் ஒரு பழைமை வாய்ந்த ____________ .
3. மீன்பாடும் தேன் நாடு என்று மட்டுநகரை ____________ .
4. உயிர்களிடத்தில் அன்பாக ____________ .
5. பிற இனத்தவர்களும் திருக்குறளைப் ____________ .

5 X 2 = 10 புள்ளிகள்

## 6 சொற்களை ஒழுங்குபடுத்திச் சொல்லியம் ஆக்குக.

எ.கா: மிக்கவை | பழங்கள் | ஊட்டம்

பழங்கள் ஊட்டம் மிக்கவை.

1. வீசும் | பூக்கள் | நறுமணம்

2. கொத்தியது | பழத்தைக் | கிளி

3. சென்றான் | சுற்றுலாவுக்குச் | கண்ணன்

4. எழிலன் | பேசுவான் | அன்பாகப்

5. தாயகம் | கொண்டது | எமது | வளங்களைக்

5 X 2 = 10 புள்ளிகள்

## 7 பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுக.

எ.கா: ஔவையார் எழுதிய நூல்களுள் ஒன்றின் பெயர் எழுதுக.

ஆத்திசூடி

1. வாழை இனங்களுள் ஒன்றை எழுதுக.

2. நன்னீர் எங்கிருந்து கிடைக்கின்றது?

3. திருக்குறள் கூறும் பண்புகள் இரண்டை எழுதுக.

4. குழந்தைகளைத் தூங்கவைக்கப் பாடப்படும் பாடல் எது?

5. கிளித்தட்டில் மறிக்கும் குழுத்தலைவரை எப்படி அழைப்பர்?

5 X 2 = 10 புள்ளிகள்

## 8 படத்தைப் பார்த்து மூன்று சொற்களும் மூன்று சொல்லியங்களும் எழுதுக.



எ.கா: கூடை

அப்பா பால் கறக்கிறார்.

1 __________ 2 __________

3 __________

3 X 2 = 6 புள்ளிகள்

1 __________

2 __________

3 __________

3 X 3 = 9 புள்ளிகள்

6+9 =15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**தரப்பட்டுள்ள படத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடை எழுதுக.**



### 1 பொருத்தமாக இணைக்குக.

| | | |
|---|---|---|
| எ.கா: | இது கடற்கரைக் | செல்கிறது. |
| 1 | ஒரு சிறுமி பாட்டியுடன் | விடுகின்றனர். |
| 2 | கதிரவன் மெல்ல மெல்ல | கட்டுகிறாள். |
| 3 | சிறுவர்கள் பட்டங்கள் | செல்கிறாள். |
| 4 | கப்பல் கடலில் | மறைகிறான். |
| 5 | சிறுமி மணல் வீடு | காட்சி. |

5 X 2 = 10 புள்ளிகள்

## 2 படத்தைப் பார்த்து சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளம் இடுக.

எ.கா: கடலில் மூன்று கப்பல்கள் செல்கின்றன. ( ✗ )

1. சிறுவர்கள் பந்து அடிக்கின்றார்கள். (     )
2. வானத்தில் பறவைகள் பறக்கின்றன. (     )
3. சிறுமி பொம்மை வைத்திருக்கிறாள். (     )
4. தாத்தாவும் பாட்டியும் நாயுடன் நடக்கின்றனர். (     )
5. சிறிய வள்ளம் கரையில் உள்ளது. (     )

5 X 1 = 5 புள்ளிகள்

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

## எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 10 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 15 | | | |

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |